23.2.2026

அ.வ.எண்.12/2008

வா.சா.1 சுந்தரம் த/பெ. குள்ளுபடையாச்சி

2 மற்றும் 15ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனாா் பெயா் குள்ளுபடையாச்சி என்றால் சரிதான். குள்ளுபடையாச்சிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பச்சியம்மாள் என்றால் சரிதான். இரண்டாவது மனைவி பெயர் ஆராயி என்றால் சரிதான். முதல் மனைவி பச்சியம்மாளுக்கு நானும், 2 மற்றும் 15ம் பிரதிவாதிகளும் வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் மனைவியின் வாரிசுகள் 16ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமி வாரிசுகள் என்றால் சரிதான். பச்சியம்மாள் மற்றும் ஆராயி உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான்.

16ம் பிரதிவாதி லட்சுமிக்கு 5வயது இருக்கும் போதும், முத்துசாமிக்கு 3 வயது இருக்கும் போதும் அவர்களது தாயார் ஆராயி இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர்களை எனது தாயார் பச்சியம்மாள் தான் வளர்த்தார் என்றால் சரிதான்.

தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தையின் தாத்தா வழியில் பாத்தியம் ஆகும். தாவா 4ம் அயிட்டமாக வங்கியில் உள்ள வைப்பீட்டை காட்டியுள்ளேன். அந்த தொகை எந்த வகையில் வந்தது என்றால் விவசாயத்தில் இருந்து கிடைத்த வருமானத்தின் மூலம் வந்தது. எனது தந்தைக்கு என்ன தொழில் என்றால் விவசாயம் தான். எனக்கும், 2மு் பிரதிவாதிக்கும் என்ன தொழில் என்றால் விவசாயம் தான் தொழில் ஆகும்.

3ம் பிரதிவாதியின் கணவருக்கு என்ன தொழில் என்றால் அவருக்கும் விவசாயம் தான். அவர் என்ன படித்துள்ளார் என்றால் 6ம் வகுப்பு படித்துள்ளார். வழக்கில் என்ன பங்கு கேட்டுள்ளேன் என்றால் 4ல் ஒருபங்கு கேட்டுள்ளேன். தாவா முதல் அயிட்ட சொத்து சந்திரசேகரபுரம் கிராமத்தில் உள்ள அக்ரஉறாரத்தில் அமைந்துள்ளது. 2ம் அயிட்ட சொத்து சந்திரசேகரபுரத்தில் உள்ள மிட்டா நிலத்தில் அமைந்துள்ளது.

3ம் அயிட்ட சொத்து கள்ளகுறிச்சி எடுத்தவாய் நத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா முதல் அயிட்ட சொத்து எனது தந்தையின் சித்தப்பா வகையில் உரிமை அடைந்ததாகும். அந்த சொத்தை பொறுத்து எனது தந்தை மற்றும் சித்தப்பா இருவரும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் அதை பொறுத்து ஆவணம் எதுவும் கிடையாது. வாய்மொழி பாக பிரிவினையை ஊர்ஜிதம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா மட்டும் தான் அவர்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது.

வழக்கு சொத்துக்களை யாா் அனுபவம் செய்து வந்தாா்கள் என்றால் நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக அனுபவம் செய்து வந்தோம். எங்கள் குடும்பத்திற்கு விவசாயம் தவிர வேறு தொழில் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் குள்ளுபடையாச்சியின் தந்தை பெயா் அய்யனாா் படையாச்சி என்றால் சரிதான். அய்யனாா் படையாச்சியின் உடன்பிறந்த சகோதரா்கள் நடுபையன் (எ) ஆறுமுக படையாச்சி, பழனி படையாச்சி, சின்னதம்பி படையாச்சி என்றால் சரிதான். அவர்கள் என்ன தொழில் செய்தார்கள் என்றால் அனைவரும் விவசாயம் தான் செய்தார்கள்.

அய்யனார் படையாச்சியின் மனைவி பெயர் குள்ளம்மாள் ஆகும். அய்யனார் படையாச்சிக்கு என்னுடைய தந்தை குள்ளுபடையாச்சி மற்றும் சித்தப்பா பெயர் சாந்தபடையாச்சி இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். அய்யனார்படையாச்சி கலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார் என்றால் எனது தந்தை சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். அய்யனார் படையாச்சி இறந்த அடுத்தநாளே குள்ளம்மாளும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் குள்ளுபடையாச்சி மற்றும் சாந்தபடையாச்சி ஆகியோரை எனது தாத்தா அய்யனார் படையாச்சியின் தந்தை பெரிய ஆறுமுக படையாச்சி வளர்த்து வந்தார் என்றால் சரிதான். பெரிய ஆறுமுக படையாச்சியை ஆறுமுக படையாச்சி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான்.

நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். தாவா 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து பெரிய ஆறுமுக படையாச்சி பெயரில் வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுக படையாச்சி அவர் கிரையம் பெற்ற சொத்து மற்றும் இதர சொத்துக்களை அடமானம் வைத்து வா.சா.ஆ.5 மூலம் கடன் வாங்கினார் என்றால் சரிதான். அந்த கடனை யார் யார் வாங்கினார் என்றால் ஆறுமுக படையாச்சியும் அவரது மகன் அய்யனார் படையாச்சியும் வாங்கியுள்ளார்கள். அந்த பத்திரத்தில் எதற்காக கடன் வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நிலம் வாங்குவதற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடன்களை தீர்ப்பதற்காகவும் சொத்து அடமானம் வைக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த கடனை கட்டி தீர்த்த சமயத்தில் அய்யனார் படையாச்சி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை பொறுத்து பெரிய ஆறுமுக படையாச்சி பெயரில் எத்தனை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் 6 ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. ஆறுமுக படையாச்சியின் மகன்கள் நடுப்பையன் என்கிற ஆறுமுக படையாச்சி, பழனி படையாச்சி, சின்னதம்பி படையாச்சி ஆகியோர் ஒரே குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

அவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களையும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் கூட்டாக விவசாயம் செய்து கிடைத்த வருமானத்தின் மூலம் நடுப்பையன் என்கின்ற ஆறுமுக படையாச்சி பெயரில் வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.16 வரை மற்றும் வா.சா.ஆ.47 கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.47 நடுப்பையன் என்கின்ற ஆறுமுக படையாச்சி பெயரில் தாவா முதல் அயிட்ட சொத்து பொறுத்து ஏற்பட்ட ஆவணம் என்றால் பெரிய ஆறுமுக படையாச்சி பெயரில் ஏற்பட்டதாகும்.

வாய்மொழி பாக பிரிவினை ஏற்பட்டதாக சொல்வதற்கு குறிப்பிட்ட நான்கு எல்லை கண்டு அனுபவம் செய்து வந்தார்களா என்றால் ஒவ்வொருவரும் தனித்தனியாக அனுபவம் செய்து வந்தார்கள். தாவா முதல் மற்றும் 2ம் அயிட்ட சொத்துக்களுக்கு வருவாய்துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது.

முத்துசாமி என்பவருக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் உள்ளதா என்றால் இல்லை. அவர் பெயபரில் உள்ள சொதுதுக்கு யார் பணம் கொடுத்தது என்றால் எனது பெற்றோர் பெயரில் உள்ள சொத்துக்களை விற்று அவர் பெயரில் வாங்கப்பட்டது. 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனது தந்தை பெயரில் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டு அதன்பின்னர் முத்துசாமி பெயரில்

மற்றும் பெருமாள் பெயரில் கிரையம் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எநாளது தேதி வரை பாகபிரிவினை செய்து கொள்ளாமல் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

தாவா முதல் அயிட்ட சொத்தின்ன பகுதியை முத்துசாமி மற்றும் அவரது வாரிசுகள் 7ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய சொத்தில் ஒரு பகுதியை 9ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் தாய்மாமா என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி கிரையம் பெற்றது போக 11ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் 7ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 12 முதல் 16 பிரதிவாதிகள் பெயரில் ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13ம் பிரதிவாதி அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதிக்கு எனக்கும் உரிமை உள்ளது என்பதால் 17 மற்றும் 18 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். முத்துசாமி இறந்து விட்டதால் அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

எனது தந்தை குள்ளூபடையாச்சி 2009ம் ஆண்டே இறந்து விட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்ன கட்சி செய்து வருகிறார் என்று படித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவர் தனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்களை பொறுத்து எனக்கும், அவருக்கும் 7.3.2007 தேதியில் ஒரு உயில் ஆவணத்தை அவருடைய பங்கை பொறுத்து எனது தந்தை எழுதி வைத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அந்த உயிலில் எனக்கும் 2ம் பிரதிவாதியும் சொத்தை அடைந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவா சொத்துக்களில் எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களில் தலா 8ல் 3பங்கும், முத்துசாமி வாரிசுகளான 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 8ல் 2பங்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 2ம் பிரதிவாதி அவருக்கு உள்ள 8ல் 3பங்கை அடைந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

3 முதல் 6, 12 மற்றும் 17,18 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

Sd/- K. Sundaram

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram